ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 40/5 — 1973 ජනවාරි 01 වැනි සඳුද — 1973.01.01

40/5 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 01 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல் ஜி டி/சீ/4/ரி/14

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

183 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 இன் 42 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 183 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக மாவனல்லை பட்டினம் சம்பந்தமான முன் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1971 மார்ச்சு 21 ன் 14,950/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனோடுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் 1973 ஜனவரி 1 ம் திகதியிலிருந்து திருத்துகிறேன்.

"(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அப்பட்டினத்திற்கு ஒரு புதிய பட்டின சபை அமைக்கப்பட்டு அச்சபை தனது தலைவரைத் தெரிவு செய்யும் வரைக்கும், அந்நோக்கத்திற்கென அக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு பட்டின சபையின் தத்துவங்களைப் பிரயோகிப் பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஹெலகுமாரகே பரக்கும் விஜேசிங்க அவர்களை மாவனல்லை பட்டினத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கிறேன்".

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 30 ந் தி.

1–308

---

எல் ஜி டி/சீ/4 (வீ)/1/2.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

54 ம் பிரிவின் கீழான கட்டளை

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக ஹுங்வெல்லபேருவ கிராமப் பிரதேசம் சம்பந்தமாக முன் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1971 ஜூலை 5 ன் 14,965/8 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனோடுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் 1973 ஜனவரி 1 ந் திகதியிலிருந்து திருத்துகிறேன்.

"(ஆ) புதியதொரு கிராமச் சபை அக்கிராமப் பிரதேசத்திற்கு அமைக்கப்படும் வரை பாதுக்கை ஹொரகலையில் வசிக்கும் திரு. டொன் பிரான்ஸிஸ் வெலிக்கல அவர்களை அக்கிராமப் பிரதேசத்தின் அலுவல்களை நிர்வகிக்கும்படி பணிக்கிறேன்".

பீலிக்ஸ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 30 ந் தி.

1–307

---

### கம்பளைப் பட்டினம்

களியாட்டக் கட்டளைச் சட்டம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் கம்பளை பட்டின விசேட ஆணையாளரினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவினால் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

கம்பளைப் பட்டின நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தின் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்கள் மீது (267 ம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் 1957 சனவரி 25 இன் 11,053 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் அத்தகைய கொடுப்பனவு சம்பந்தமாக விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விதிகளின்படியான ஒரு வரியை 1973 சனவரி 1 ந் திகதியிலிருந்து கம்பளை, கம்பளைப் பட்டின விசேட ஆணையாளர் இத்தால் விதித்து அறவிடுகிறார்.

கட்டணத் தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக் கட்டணம் :—

| | | வரி விதிதம் ரூ. ச. |
|---|---|---|
| 1. | 19 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 39 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 5 |
| 2. | 39 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 59 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 10 |
| 3. | 59 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 79 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 15 |
| 4. | 79 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 99 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 20 |
| 5. | 99 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1.19 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 25 |
| 6. | 1.19 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.39 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 30 |
| 7. | 1.39 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.59 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 35 |
| 8. | 1.59 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.79 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 40 |
| 9. | 1.79 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.99 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 45 |
| 10. | 1.99 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.19 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 50 |
| 11. | 2.19 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.39 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 55 |
| 12. | 2.39 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.59 ரூபாவுக்கு மேற்படாதிருக்குமிடத்து | 0 60 |
| 13. | 2.59 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.79 ரூபாவுக்கு மேற்படாதிருக்குமிடத்து | 0 65 |
| 14. | 2.79 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.99 ரூபாவுக்கு மேற்படாதிருக்குமிடத்து | 0 70 |
| 15. | 2.99 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3.49 ரூபாவுக்கு மேற்படாதிருக்குமிடத்து | 0 75 |
| 16. | 3.49 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3.99 ரூபாவுக்கு மேற்படாதிருக்குமிடத்து | 0 85 |
| 17. | 3.99 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4.99 ரூபாவுக்கு மேற்படாதிருக்குமிடத்து | 1 0 |
| 18. | 5 ரூபாவுக்கு அல்லது அதற்கு மேற்படுமிடத்து— | |
| | 1. முதல் 5 ரூபாவுக்கு | 1 25 |
| | 2. மேலதிக ஒவ்வொரு 1 ரூபாவுக்கு | 0 25 |

பி. சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 26 ந் உ.

1–306

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது